

தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஏற்பாட்டில் தென்காசி மாவட்டம் சுரண்டையில் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் அண்ணா அறிவாலயம் (District Fire Wall) கட்டிடத்தினை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைத்தார். நிகழ்வில் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், மாவட்ட துணை செயலாளர் கென்னடி தலைமை செயற்குழு உறுப்பினர் ஜேசுராஜன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர் அன்பழகன், பொன் செல்வன், ரமேஷ், ஷேக் முகமது, குமார், சிவக்குமார், சமுத்திர பாண்டியன், நகர செயலாளர்கள் வெங்கடேசன், கணேசன் பேரூர் செயலாளர் சுடலை, தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அழகு தமிழ் சங்கர் உள்பட துணை அமைப்பாளர்கள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி 55வது பட்டமளிப்பு விழா!

# இளங்கலை மருத்துவப் படிப்பு - 250 நபர்களுக்கு பட்டங்கள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்!

நெல்லை, ஆக.12 -

நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் 08.08.2025 அன்று நடைபெற்ற 55வது பட்டமளிப்பு விழாவில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு,அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.ரேவதி பாலன் ஆகியோர் முன்னிலையில் இளங்கலை மருத்துவப் படிப்பு முடித்த 250 மருத்துவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

பின்னர் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை,எளிய மக்களின் நலன்கருதி மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக “நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்” திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

இந்த திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான பேர் பயனடையும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஆகஸ்ட் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை ஒவ்வொரு வாரம் சனிக்கிழமைகளில் வட்டாரத்திற்கு 3 முகாம் மற்றும் மாநகராட்சிக்கு 3 முகாம் என தமிழ்நாட்டில் மொத்தம் 1256 “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற உள்ளது. பொது மக்களுக்கு அடிப்படை சிகிச்சை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் பரிசோதனைகளும் செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் அதிகமான வெளிநோயாளிகள் வருவது சென்னையிலுள்ள ராஜுவ் காந்தி அரசு மருத்துவமனை, இரண்டாவது மதுரை இராஜாஜி மருத்துவமனை, மூன்றாவது மிக அதிகமாக வருவது திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தான், நாளொன்றுக்கு வெளிநோயாளிகள் 5000 நபர்கள் வருகை தருகின்றனர். உள்நோயாளிகள் 3000க்கும் மேற்பட்ட நபர்கள் உள்ளனர்.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் திருவனந்தபுரம் புற்றுநோய் சிகிச்சை மையத்திற்குத் தான் செல்ல வேண்டியிருந்த நிலையில், இப்பகுதிகளில் புற்றுநோய்க்கு சரியான மருத்துவம், ஆராய்ச்சி, உபகரணங்கள் கர்ப்பப்பை புற்றுநோய், மார்ப்பக புற்றுநோய் போன்ற புற்றுநோய் தொடர்பான தாக்கங்களை கண்டறிவதற்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதிய கருவிகள் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு,பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் புற்றுநோய் சம்பந்தமான நோய்கள் கண்டறிவதற்கும், சிகிச்சை வழங்குவதற்கும் பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் சிறந்த முறையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. புற்றுநோய் சிகிச்சை பெறுவதற்கும், பரிசோதனைக்கும் ஆண்டுக்கு 2000க்கும் மேற்பட்டவர்கள் வந்து சிகிச்சை பெறுகின்றனர்.

மருத்துவத்துறையில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. அயல் நாடுகள், அயல் மாநிலங்களிலிருந்து உயர் சிகிச்சைக்கு தமிழ்நாட்டை நாடி வருகிறார்கள் என்றால் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் மருத்துவர்கள் தலைசிறந்த மருத்துவர்கள். நீங்கள் நன்றாகப் பணிபுரிந்து ஏழை,எளிய மக்களுக்கு மருத்துவச் சேவைகள் கிடைக்கக் கூடிய அளவிற்கு செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

விழாவில், மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மரு.சுரேஷ் துரை, மருத்துவ கண்காணிப்பாளர் மரு. பாலசுப்பிரமணியன், மரு. எஸ்தர் உட்பட மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள், மருத்துவர்கள், மருத்துவ மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் ஈ.இராஜா எம்.எல்.ஏ. தலைமையில்

# தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி!

## ச.தங்கவேலு - ராணி ஸ்ரீகுமார் எம்.பி. பங்கேற்பு!

தென்காசி, ஆக.12 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்டம் சிவகிரி பேரூர் கழக அலுவலகத்தில் இருந்து கலைஞர் அவர்களின் நினைவு நாள் அமைதிப் பேரணி தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ச.தங்கவேலு, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ம் ஆண்டு நினைவு தினம் தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிவகிரியில் அனுசரிக்கப் பட்டது.

அதன்படி தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு, யூ.எஸ்.டி.சீனிவாசன், மாநில மருத்துவரணி துணை செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம், மாவட்ட அவைத்தலைவர் சுப்பையா, மாவட்ட துணை செயலாளர் மனோகரன், புனிதா, பொருளாளர் சரவணன், மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் மணிகண்டன், டாக்டர் சுமதி வேலுச்சாமி, வழக்கறிஞர் பொன்ராஜ், பேரூராட்சித் தலைவர் கோமதி சங்கரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.ஒன்றிய செயலாளர் பொன் முத்தையா பாண்டியன் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து கலைஞர் அவர்களின் நினைவு தினத்தையொட்டி சிவகிரி பேரூர் கழக அலுவலகத்தில் இருந்து அமைதிப் பேரணியாக சென்று வேல்கேர் மருத்துவமனையில் நிறைவு செய்து, அங்கு வளாகத்தில் உள்ள கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் தேவதாஸ், சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் பெரியதுரை, லாலா (எ) சங்கர பாண்டியன், கடற்கரை, கிறிஸ்டோபர், வெள்ளத்துரை, பால்ராஜ், நகர செயலாளர்கள் சங்கரன்கோவில் மு.பிரகாஷ், புளியங்குடி கிழக்கு அந்தோணிசாமி, மேற்கு நாகூர்கனி, நகர் மன்றத் தலைவர் விஜயா, பேரூர் செயலாளர்கள் கே.டி.சி. குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் கிட்டசன், பிச்சையா, உதயகுமார், சார்பு அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக், வீரமணி, முத்து லட்சுமி, விக்னேஷ் ராஜா, பொன் ரமேஷ், முத்துக்குமார், கட்ட பொம்மன், சுந்தர், செல்லத்துரை, முனீஸ்வரன், சங்கர், மாரியப்பன்,ராயல் கார்த்திக், ராஜ ராஜன், மாவட்டப் பிரதிநிதி நல்லசிவன், முன்னாள் பொறுப்புக் குழு உறுப்பினர் விவேகானந்தன், கூட்டுறவு சங்கத் தலைவர் மருது பாண்டியன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் சரவணன், முனியாண்டி, பேரூர் இளைஞரணி அமைப்பாளர் ராம்குமார், மணிகண்டன், தொ.மு.ச. மண்டல அமைப்பு செயலாளர் மைக்கேல் நெல்சன், சங்கர்ராஜ், ஈஸ்வரன், மாடசாமி, மாணவரணி வெங்கடேஷ், பாலகுரு, தங்கராஜ் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் ஊராட்சி தலைவர் ஜோதி மணிகண்டன் நன்றி கூறினார்.

### தென்காசி தெற்கு மாவட்டம்

# கீழப்பாவூர் வடக்கு ஒன்றியத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது!

தென்காசி, ஆக.12 –

தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் பூலாங்குளம் காமராஜர் சிலை அருகில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நயடைபெற்றது.

கீழப்பாவூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் பொன்செல்வன் வரவேற்புரையாற்றினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் அருள் தொடக்க உரையாற்றினார். நிகழ்ச்சியை தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகச்சாமி தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று சிறப்புரையாற்றினார். முன்னதாக தலைமைக் கழக பேச்சாளர் சூர்யா வெற்றி கொண்டான் உரையாற்றினார். நிகழ்வில் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கணேஷ் குமார் ஆதித்தன், தென்காசி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கலை கதிரவன், மாவட்ட துணை செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜேசுராஜன், பொதுக்குழு ரஹீம் , ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், சீனித்துரை, சிவக்குமார், சேக் முகமது, ரமேஷ், ஜெயா ஐயப்பன், நகர செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன்,. கணேசன், பேரூர் செயலாளர்கள், நெல்சன், ஜெகதீசன், பண்டாரம். வெள்ளத்துரை, கோபால், சார்பு அணி அமைப்பாளர்கள் முத்துக்குமார், முத்துராமலிங்கம், இசக்கி பாண்டியன், அழகு தமிழ் சங்கர், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் காவேரிசீனிதுரை, கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கீழப்பாவூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் சீ.பொன்செல்வன் செய்திருந்தார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி உட்பட பலர் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில், திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில், 9.8.2025 அன்று தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் நிலமில்லா விவசாயிகளுக்கு நடமாடும் காய்கனி வண்டிகளை வழங்கி, விவசாயிடம் கலந்துரையாடினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திருமதி சத்யா, உதவி இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) தர்மர், திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசகம் மற்றும் விவசாயிகள் உட்பட பலர் உள்ளனர்.

### நம்பகத் தன்மையை தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும்! இதுவே

# ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஆக. 12 –

வாக்குப் பதிவு குறித்து நம்பகத் தன்மையை மக்களுக்குத் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.



தினகரன்
ஆகஸ்ட் 10, 2025 ஞாயிற்றுக்கிழமை
தெளிவுபடுத்த வேண்டும்

அது வருமாறு:–

இந்திய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எழுப்பியுள்ள ‘வாக்கு திருட்டு’ என்ற குற்றச்சாட்டு, தற்போது நாடு முழுவதும் பெரும் புயலை கிளப்பி உள்ளது. கடந்த 2024ம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தல் முதல் பல்வேறு தேர்தல்களில் இந்த வாக்கு திருட்டு நடந்துள்ளது. இந்திய தேர்தல் ஆணையமும், ஒன்றிய பா.ஜ. அரசும் இணைந்து இதை செய்துள்ளது. போலி வாக்காளர்கள், போலி முகவரி, ஒரே முகவரியில் அதிக வாக்காளர்கள், தவறான புகைப்படங்கள், படிவம் 6ஐ தவறாகப் பயன்படுத்துதல் ஆகிய 5 வழிகளில் இந்த வாக்கு திருட்டு நடந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

“எங்களது கட்சிக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளில் தோல்விக்கான காரணம் குறித்து முழுமையாக ஆய்வு செய்தோம். இதில் போலி வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டதை அறிந்துள்ளோம். உதாரணமாக கர்நாடகாவின் மத்திய பெங்களூரு மக்களவைத் தொகுதியில் இந்த வகையில் 1 லட்சத்து 250 வாக்குகள் திருடப்பட்டுள்ளது. மகாதேவபுரா தொகுதியில் மட்டும் 11,965 போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். போலி மற்றும் தவறான முகவரிகள் மூலம் 40,009 வாக்காளர்கள் போலியாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மத்திய தொகுதியில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களின் முகவரி போலியாக உள்ளது.

வீட்டு முகவரியின் கதவு எண் பூஜ்ஜியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாக கோடிட்டு காட்டியுள்ளார்.

வாக்குகளை யார் திருடுகிறார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். முன்பு எங்களிடம் ஆதாரம் இல்லை. இப்போது 100 சதவீதம் ஆதாரம் இருக்கிறது. எனவே வழக்கம்போல் தேர்தல் ஆணையம் சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. அவர்கள் எங்களுக்கு சி.சி.டி.வி. காட்சிகள் மற்றும் மின்னணு வாக்காளர் பட்டியலை வழங்க வேண்டும். இது எனது கோரிக்கை மட்டுமல்ல. ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளின் கோரிக்கை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பீகார் சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடக்கிறது. இதற்காக அம்மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் சமீபத்தில் முடிந்தது. கடந்த 1ம் தேதி வரைவு பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அதில் 65 லட்சம் வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டுள்ள தாக பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. இந்தச்சூழலில் ராகுல்காந்தி தெரிவித்துள்ள ‘வாக்கு திருட்டு’ என்பது அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, மக்கள் மன்றத்திலும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் “ராகுல்காந்தி சொல்வது உண்மையென்றால், தேர்தல் விதி 1960 (3) (ஆ) பிரிவின் படி பிரமாணப் பத்திரம் ஒன்றில் கையெழுத்திட்டு புகார் அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியாவில் 2004ம் ஆண்டு பொதுத் தேர்தலில் முதல் முறையாக மின்னணு வாக்குப் பதிவு முறை அமலுக்கு வந்தது. அதிலிருந்து 20 ஆண்டுகளாக இந்த முறையில் தான் வாக்குப்பதிவு நடந்து வருகிறது. ஒவ்வொரு தேர்தலிலும் மின்னணு வாக்கு இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து எதிர்க்கட்சிகளும், நடு நிலையாளர்களும் பல்வேறு கேள்விகளை முன்வைத்து வருகின்றனர். இதற்கு 100 சதவீதம் தெளிவான தீர்வு என்பது இதுவரை கிடைக்காத ஒன்றாகவே உள்ளது.

இப்படிப்பட்ட நிலையில்தான் ‘வாக்கு திருட்டு’ என்ற குற்றச்சாட்டு இப்போது லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் ஹேஷ்டேக்காகி வருகிறது. எனவே வாக்குப்பதிவு குறித்த நம்பகத்தன்மையை மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமன்றி, மக்கள் மன்றத்திற்கும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும். இதுவே ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் என்கின்றனர் நடுநிலையாளர்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



திருப்புவனத்தில் மேற்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டம் அவைத் தலைவர் பொன். இளங்கோவன் தலைமையில் ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன் முன்னிலையில் நடைபெற்றது கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்களை மாவட்ட கழக துணை செயலாளர். பேரூராட்சி மன்ற தலைவர் சேங்கைமாறன் வாசித்தார். தமிழ்நாடு ஓரணியில் கழக உறுப்பினர்கள் சேர்த்தல் படிவங்களை மாவட்டக் கழகத்தில் மற்றும் தலைமை கழகத்தில் ஒப்படைக்க தீர்மானிக்கப்படுகிறது. .தமிழக மக்களுக்கு நலம் காக்கும் மருத்துவ முகாம் புதிய திட்டத்தை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானிக்கப்படுகிறது. இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பொற்கோ. ஒன்றிய கழக நிர்வாகிகள். புலியூர் ரவி. கரிசல் குளம் ராமு. சொட்ட தட்டி சக்திமுருகன். மாங்குடி வெங்கடேசன். மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் தேவதாஸ். மாவட்ட தொழிலாளர்கள் துணை அமைப்பாளர் சங்கர். தொ.மு.ச பிச்சை. ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அறிவு அரசு. துணை அமைப்பாளர்கள் காளிதாஸ்.கணேஷ் பிரபு. மலைராஜன். மற்றும் கிளைக் கழக செயலாளர்கள்.பாக முகவர்கள் . பாக டிஜிட்டல் முகவர்கள். கலந்து கொண்டார்கள்.